**04.11.2025**

**SC No. 403 / 2018** **PW2.** துர்க்காதேவி

எதிரி ஆஜர்.

**இந்நீதிமன்ற Crl.MP.No. 292/2025, நாள் 09.06.2025, உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :

நானும் எதிரியும், ஒரே குலதெய்வத்தைக் கும்பிடுபவர்கள் என்றால் சரிதான். அசா1 எனது கணவரின் உடன் பிறந்த அண்ணன் மகள் ஆவார். நாங்கள் தான் அசா1 ஐ வளர்த்து வந்தோம். அசா1 ம் எதிரியும் அண்ணன் தங்கை உறவுமுறை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல், எதிரி எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழையவில்லை என்றால் சரியல்ல. அசா1 கையை அறுத்துக் கொள்ளவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு முதல் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அசா1 ஒருவருடகாலமாக எதிரியைக் காதலித்து வந்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றும், 1 ¼ பவுன் நகையை எதிரியிடம் கொடுத்ததாக, அசா1 சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர், எதிரியையும், எதிரியின் குடும்பத்தாரையும் சந்திக்கவில்லை என்றும், எதிரியும் அவரது பெற்றோரும் 2,3 நாட்கள் அவகாசம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி, அசா1 ஐ எந்த காலத்திலும் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைகள் கூறி, கெடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியும், அசா1 ம் ஒருவருக்கொருவர் காதலித்து வந்து, திருமணம் செய்து கொள்ள கேட்டு, மறுத்ததால் தான் அசா1 புகார் கொடுத்தார் என்றும் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 அவருக்கும், எதிரிக்கும் இடையே எவ்விதமான தாம்பத்தியம் நடக்கவில்லை என்று தான் என்னிடம் சொன்னார் என்றும் எதிரி, அண்ணன் முறையாக இருந்தாலும் பரவாயில்லை எப்படியாவது அசா1 க்கு திருமணம் செய்து கொடுக்க

வேண்டும் என்று நானும் எனது கணவரும் வற்புறுத்தினோம் என்றும் எதிரி அதற்கு மறுத்ததால், அசா1 ஐ வைத்து எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**04.11.2025**

**SC No. 403 / 2018** **PW3.** குமரேசன்

எதிரி ஆஜர்.

**இந்நீதிமன்ற Crl.MP.No. 292/2025, நாள் 09.06.2025, உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :

நானும் எதிரியும், ஒரே குலதெய்வத்தைக் கும்பிடுபவர்கள் என்றால் தெரியாது. அசா1 எனது உடன் பிறந்த அண்ணன் மகள் ஆவார். நாங்கள் தான் அசா1 ஐ வளர்த்து வந்தோம். அசா1 ம் எதிரியும் அண்ணன் தங்கை உறவுமுறை என்றால் சரியல்ல. அசா1 கையை அறுத்துக் கொள்ளவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு முதல் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அசா1 ஒருவருடகாலமாக எதிரியைக் காதலித்து வந்ததாக என் மனைவி என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியையும், எதிரியின் குடும்பத்தாரையும் சந்திக்கவில்லை என்றும், அவர்கள் 3 நாட்கள் அவகாசம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி, அசா1 ஐ எந்த காலத்திலும் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி, அசா1 ஐ ஆசை வார்த்தைகள் கூறி, கெடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியும், அசா1 ம் ஒருவருக்கொருவர் காதலித்து வந்து, திருமணம் செய்து கொள்ள கேட்டு, மறுத்ததால் தான் அசா1 புகார் கொடுத்தார் என்றும் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 அவருக்கும், எதிரிக்கும் இடையே எவ்விதமான தாம்பத்தியம் நடக்கவில்லை என்று தான் என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. நாங்களும் எதிரியும் ஒரே குலசாமியைக் கும்பிடுவதால், எதிரி அசா1 க்கு அண்ணன் முறை என்றால் சரியல்ல. எதிரி, அண்ணன் முறையாக இருந்தாலும் பரவாயில்லை எப்படியாவது அசா1 க்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று

நானும் எனது மனைவியும் வற்புறுத்தினோம் என்றும் எதிரி அதற்கு மறுத்ததால், அசா1 ஐ வைத்து எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தமிழிலும், ஆங்கிலத்திலும் கையொப்பம் போடுவேன். எனது முதல் விசாரணையில் நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்துள்ளேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை